# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 02 வியாழக்கிழமை (19.10.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 323


# காலி துறைமுகத்துக்குள் ஊடுருவி கடற்படைத் தளம் மீது தாக்குதல்!


மேலும் செய்திகள், படங்கள் 2ஆம், 8ஆம் பக்கங்களில்




துறைமுகப்பகுதியில் கிளம்பிய புகை மண்டலத்தை தொலைவில் நின்று பார்க்கும் மக்கள்.

## வெடிகுண்டுப் படகுகளுடன் வந்த பதினைந்து பேர் அணி கைவரிசை

கொழும்பு, ஒக்ரோபர் 19

வெடிகுண்டுகள் பொருத்திய ஐந்து படகுகளுடன் காலி துறைமுகத்தினுள் நேற்றுக் காலை வேளை திடீரென நுழைந்த தற்கொலைப்படை அணியொன்று அங்குள்ள கடற்படைத் தளத்தின் மீது பெரும் தாக்குதல் நடத்தியிருக்கிறது.

துறைமுகத்தினுள் அமைந்திருந்த தென்பிராந்திய கடற்படைத் தளத்தின் படகுத்துறை மற்றும் அங்கு நிறுத்தப்பட்டிருந்த கடற்படைப் படகுகளோடு வெடிகுண்டுப் படகுகள் மோதி வெடித்துச் சிதறியிருக்கின்றன. கடற்படை நிலைகள் மீது ஆர்.பி.ஜி. தாக்குதல்களும் நடத்தப்பட்டிருக்கின்றன.

பெரும் வெடி ஓசை மற்றும் வேட்டுச் சத்தங்களால் துறைமுகப் பகுதி சுமார் ஒருமணி நேரம் அதிர்ந்தது. கரும் புகை மண்டலமும் மேலெழுந்தது.


(08ஆம் பக்கம் பார்க்க)


## போவர் - ரணில் சந்தித்துப் பேச்சு

கொழும்பு, ஒக். 19

நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹன்சன் போவர் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பின்போது சமாதான முன்னெடுப்புகள் மற்றும் தற்போதைய சூழ்நிலைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான உடன்பாட்டின் மூலம் சமாதான முனைப்புக்களை முன்னெடுக்கமுடியும் - என்று இந்தச்சந்திப்பில் ரணில் தெரிவித்தார். (த-12)

**பேச்சுக்குச் செல்லும் நிலைப்பாட்டில் மாற்றமில்லை**

## தாக்குதல்கள் நீடிக்கும் நிலையில் அரசியல் தீர்வு பற்றிப் பேச முடியாது!

**ஜப்பானின் சிறப்புத் தூதரை சந்தித்தபிறகு தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு**



கிளிநொச்சி, ஒக்.19

சகல விதமான தாக்குதல்களையும் அரசு உடனடியாக முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். தாக்குதல்கள் தொடர்ந்து நடக்கின்ற நிலையில் அரசியல் தீர்வு பற்றிப் பேசமுடியாது.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

நேற்று கிளிநொச்சியில் ஜப்பானின் விசேட தூதர் யசூசி அகாஷியை சந்தித்துப் பேசிய பின்னர் ஜப்பானிய 'என்.எச்.கே.' தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியிலேயே தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

அமைதி முயற்சிகள் தொடங்கப்பட வேண்டும் என்பதில் ஜப்பானிய சிறப்புத் தூதர் தீவிரமாக ஈடுபட்டு வருவதுடன் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்பதில் அவர் முழு (08ஆம் பக்கம் பார்க்க)

## நீர்வேலியில் கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம், ஒக்.19

நீர்வேலி மாசிவன் சந்திப் பகுதியில் நேற்று பிற்பகல் 1.15 மணியளவில் கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதற்கிடையில் - இந்தச்சம்பவத்தில் சிக்கி படுகாயமடைந்ததாகத் தெரிவித்து நீர்வேலி வடக்கைச் சேர்ந்த ஆறுமுகம் யோசப் (வயது 60) என்ற வயோதிபர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (78-15-202)

## சூட்டுக்காயத்துடன் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்.19

திருநெல்வேலி கிழக்கு, பாற்பண்ணைப் பகுதியில் இருந்து சூட்டுக்காயத்துடன் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை, சம்பவ இடத்


(08ஆம் பக்கம் பார்க்க)


## எத்தனை தடைகள் வந்தாலும் தளராமல் பேச்சைத் தொடங்க கோருகிறார் அகாஷி



கொழும்பு, ஒக்.19

சமாதானப் பேச்சுகளுக்கு முன்னர் எத்தனை தடைகள் வந்தாலும் இருதரப்பினரும் அந்தத் தடைகளைக்கண்டு மனம் தளரக்கூடாது. சமாதானப் பேச்சை உறுதியுடன் தொடரவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூஷி அகாஷி.

நேற்றுக் கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்துப் பேசினார் அகாஷி. அதன்பின்னர் செய்தியாளர்களிடம் அகாஷி கூறியதாவது:-

கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக தற்போதைய நிலையுள்ளது. பல தசாப்த காலப் பிரச்சினைக்கு ஒரே நாள் இரவில் தீர்வுகாணமுடியாது. இரு தரப்புக்கும் பொறுமையும், புரிந்துணர்வும் நிறையவே தேவை. நிறைய பேச்சுகள் நடத்த வேண்டும்.

எத்தனை தடைகள் வந்தாலும் மனம் தளரக்கூடாது. எதிர்காலப் பேச்சுகளுக்கான கதவுகள் சாத்தப்படக்கூடாது. அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான பேச்சுகளில் ஏற்படும் சிக்கல்களை முடிவுக்குக்கொண்டுவந்து பேச்சுகள் தொடர சர்வதேச சமூகம் குறிப்பாக 4


(08ஆம் பக்கம் பார்க்க)


## தொண்டு நிறுவனப் பணியாளரில் 11பேரின் சடலங்கள் தோண்டி எடுப்பு

திருகோணமலை, ஒக்.19

மூதூரில் படுகொலை செய்யப்பட்ட தன்னார்வத் தொண்டு அமைப்பான அக்ஷன் பாம் நிறுவனத்தின் 11 பணியாளர்களின் சடலங்கள் விசாரணைகளுக்காக நேற்றுத் தோண்டி எடுக்கப்பட்டன.

மேற்படி படுகொலைச் சம்பவத்தில் உயிரிழந்த 17 பணியாளர்களில் இரண்டு பேரின் சடலங்கள் அண்மையில் தோண்டி எடுக்கப்பட்டு விசாரணைகளுக்காக கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தமை தெரிந்ததே.

மிகுதியாக உள்ள 15 பேரின் சடலங்களை நேற்றையதினம் தோண்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் சம்பவத்தில் கொல்லப்பட்ட பணியாளரான முஸ்லிம் ஒருவரின் சடலத்தைத் தோண்டுவதற்கு அவரது உறவினர்கள் அனுமதிக்கவில்லை. அத்துடன் ஏனைய மூன்று சடலங்கள் புதைக்கப்பட்டிருந்த இடங்களை அடையாளம் காட்ட உயிரிழந்தவர்களின் உறவினர்கள் நேற்றையதினம் அங்கு சமுகமளிக்கவில்லை.

இதனையடுத்தே 11 பணியாளர்களின் சடலங்களைத் தோண்டும் பணிகள் நேற்று இடம்பெற்றன. திருகோணமலை உப்புவெளி இந்து மயானம் உட்பட நான்கு மயானங்களில் நேற்றைய தினம் சடலங்கள் தோண்டும் பணி நடைபெற்றன.

இரண்டு நீதிமன்ற நீதிவான்கள், ஆறு மாவட்ட வைத்திய அதிகாரிகள், ஆஸ்திரேலிய விசேட நிபுணர்கள் நேற்றைய தினம் அங்கு சமுகமளித்திருந்தனர்.

## கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்றும் போராட்டம்

கொழும்பு, ஒக்.19

வடக்கு-கிழக்கு மாகாணத்தை பிரிக்கக்கூடாது என்று வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்றும் நாடாளுமன்றத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாக நாடாளுமன்ற அமர்வுகள் பாதிக்கப்பட்டன.

இதனையடுத்து முற்பகல் 9.40 மணியளவில் நாடாளுமன்ற அமர்வுகள் ஒருமணித்தியாலத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டன.

முன்னதாக சபாநாயகர் இருக்கைக்கு வரும் வழியை மறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் கோஷங்களை எழுப்பினர். இதன் காரணமாக சபாநாயகர் பின்கதவின் ஊடாக தமது இருக்கையைச் சென்றடைந்தார். செங்கோலும் அரசசார் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங்கள் ஊடாக எடுத்துவரப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# காலி மாவட்டம் முழுவதும் ஊரடங்கு பிறப்பித்துத் தேடுதல்!

கொழும்பு, ஒக்.19

காலி துறைமுகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து நிலைமை முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டிருப்பதாக அரசு தெரிவித்திருக்கிறது.

பொதுமக்கள் அமைதி பேணுவதுடன் பாதுகாப்புப் படையினருக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நேற்றைய தாக்குதலை அடுத்து காலி மாவட்டம் முழுவதும் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. நேற்று மாலை 6 மணிவரை ஊரடங்கு அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

காலி துறைமுகம் மற்றும் அதனை அண்டிய பிரதேசம் அடங்கலாக காலி மாவட்டம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொலிஸார் மற்றும் முப்படையினரும் கூட்டாக பெரும் தேடுதல்களில் ஈடுபட்டனர்.

இத்தேடுதல் நடவடிக்கைகளில் சுமார் 12 தமிழர்கள் வரை கைது செய்யப்பட்டனர் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

தாக்குதலாளிகள் உள்நுழைந்திருக்கக் கூடும் எனச் சந்தேகிக்கப்பட்ட கரையோரப் பகுதிகளில் தீவிர தேடுதல்கள் நடத்தப்பட்டன.

கொழும்பு-காலி மற்றும் கொழும்பு - மாத்தறை வீதிகள் மூடப்பட்டுள்ளன.

காலி மாவட்டத்துக்கு வெளியே செல்லும் சகல வாகனங்களும் நிறுத்தப்பட்டு தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டன. பாடசாலைகள் மூடப்பட்டு மாணவர்கள் வீடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர். (ஐ)

# தீபாவளியை முன்னிட்டு போர் நிறுத்தம் செய்க

## இரு தலைவர்களுக்கும் மகஜர்

யாழ்ப்பாணம், ஒக்.19

நாளை 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் தீபாவளி முடியும் வரையிலான காலத்தில் முழுமையான போர் நிறுத்தத்தை மேற்கொள்ளுமாறு -

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் -

யாழ். மாவட்ட மனித உரிமைக்கான பாதுகாப்புக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது சம்பந்தமாக மேற்படி அமைப்பு இரு தலைவர்களுக்கும் நீண்ட மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைப்பின் செயலாளர் தலைமையில் முக்கிய பிரமுகர்கள், கல்விமான்கள், சமயப் பிரமுகர்கள், ஓய்வுபெற்ற நீதிபதிகள் ஆகியோர் கூடி எடுத்துக்கொண்ட ஏகமனதான தீர்மானத்துக்கு அமையவே போர் நிறுத்தத்துக்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# காலியில் தமிழர்களின் கடைகள் தாக்கப்பட்டன!

கொழும்பு, ஒக்.19

காலி துறைமுகத்தினுள் அமைந் திருந்த கடற்படைத் தளம் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து உருவாகிய பதற்ற நிலைமையின் மத்தியில் காலி நகரில் தமிழர்களுக்கு எதிரான வன்செயல்கள் வெடித்தன.

காலி நகரில் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான கடைகளைக் குண்டர்கள் தாக்கிச் சேதப்படுத்தினர் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. வாகனங்கள் சிலவும் தாக்குதலுக்கு இலக்காகின.

சிங்கள குற்றக் கும்பல்களே தமிழர்களுக்கு எதிரான வன்செயல்களில் ஈடுபட்டன என்று 'ரொய்ட்டர்' செய்தி தெரிவித்தது.

தடிகள், பொல்லுகள், இரும்புச் சட்டங்களுடன் வந்த கும்பல் ஒன்று காலி நகரில் கிட்டங்கியில் உள்ள நகைக் கடை உட்பட ஏழு கடைகளைத் தாக்கிச் சேதப்படுத்தியது என்று கூறப்படுகிறது. இதனால், காலியில் வசிக்கும் தமிழர்கள் மத்தியில் பெரும் பீதியும், பதற்றமும் ஏற்பட்டுள்ளது.

காலி நகரில் வன்முறைக் கும்பலைக் கலைப்பதற்கு பொலிஸார் வானை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று ஒரு தகவல் தெரிவித்தது. (ஐ)

# நிலாவெளி வீதியில் கிளைமோர் வெடிப்பு

கிண்ணியா, ஒக். 19

திருகோணமலை நிலாவெளி வீதியிலுள்ள 6ஆம் கட்டைப் பகுதியில் நேற்றுமுற்பகல் 11 மணியளவில் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

இக்கிளைமோர்த் தாக்குதலில் எவருக்கும் எவ்வித சேதமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் நடமாட்டம் குறைவாகக் காணப்படும் பகுதியிலேயே இக்கிளைமோர்க் குண்டு வெடித்தது.

ஏற்கனவே, இப்பகுதியில் பல தடவைகள் இவ்வாறான கிளைமோர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வீதிவழியே இராணுவத்தினரும், பொலிஸாரும் அடிக்கடி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதோடு மினி முகாம்களுக்கிடையிலான உணவு, குடிதண்ணீர் விநியோகங்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் இராணுவ வாகனங்களையும், ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் இராணுவத்தினரையும் இலக்கு வைத்து இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

ஹபரணையில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலை அடுத்து திருகோணமலையில் பிரதான வீதிகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. (ஐ)

## இந்தியத் தூதராக அலோக் பிரசாத் நியமனம்

கொழும்பு, ஒக்.19

இலங்கைக்கான இந்தியத் தூதராக அலோக் பிரசாத் நியமிக்கப்பட்டிருக்கின்றார். இந்தியத் தூதராக கடமையாற்றிய திருமதி நிருபமா ராவ் சீனாவுக்கான தூதராக இடமாற்றப்பட்டதையடுத்து அவரது இடத்துக்கு அலோக் பிரசாத் நியமிக்கப்பட்டுள்ளார். புதிய தூதர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார் என இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட - செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (த)

## திருமலையில் ஹர்த்தால்

கிண்ணியா, ஒக். 19

ஹபரணையில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலைக் கண்டித்து மக்கள் விடுதலை முன்னணியினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஹர்த்தால் காரணமாக திருமலையில் நேற்று இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

திருகோணமலை யில் உள்ளூர், வெளியூர் வாகன சேவைகள் தடைப்பட்டன. அரச அலுவலகங்கள், கூட்டுத்தாபனங்கள் உட்பட கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன.

மக்களின் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது. வீதிகள் யாவும் வெறிச்சோடிக் கிடந்தன. (ஐ)

## 'கிபிர்' வீழ்ந்தது பற்றி விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு, ஒக்.19

நீர்கொழும்பு வாவிப் பகுதியில் 'கிபிர்' விமானம் வீழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணை நடத்துமாறு உத்தரவிடப்பட்டிக்கிறது.

இந்த விசாரணையை நடத்துவதற்கு எயார் கொமடோர் ஒருவர் தலைமையில் நால்வர் அடங்கிய குழு ஒன்று சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டிருக்கிறது.

இதனிடையே நீரேரிப் பகுதியில் 'கிபிர்' விமானத்தின் சேதமடைந்த மேலும் சில பாகங்கள் செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை நீரேரிப் பகுதியில் 'கிபிர்' விமானம் விழுந்தது. இதில் விமானி உயிர் தப்பினார். அவர் தற்சமயம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# புலிகள் தாக்குதல் நடத்தினாலும் திட்டமிட்டவாறு ஜெனிவாப் பேச்சு



கொழும்பு, ஒக். 19

தமிழீழ விடுதலைப் புலிகள் எவ்விதமான தாக்குதல்களை நடத்தினாலும், திட்டமிட்டபடி இம்மாதம் 28 ஆம், 29ஆம் திகதிகளில் ஜெனிவாப் பேச்சுகள் நடைபெறும். அதில் எந்தவித மாற்றமும் இல்லை.

- இவ்வாறு பாதுகாப்புத் தொடர்பான பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

காலி துறைமுகப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் தொடர்பாக வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் சில பொய்யான - மிகைப்படுத்தப்பட்ட - தகவல்களை வெளியிட்டிருக்கின்றன. இத்தகைய செய்திகளை நம்பவேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

காலித்துறைமுகத் தாக்குதல் தொடர்பாக சில வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் பொய்யான தகவல்களை வெளியிட்டுள் ளன. இலங்கையின் சுற்றுலா மையம் ஒன்று தாக்கப்பட்டுள்ளதாக ஒரு செய்தி நிறுவனமும், முக்கிய வர்த்தக மையம் ஒன்று தாக்கப்பட்டுள்ளதாக மற்றுமொரு செய்தி நிறுவனமும் தகவல் வெளியிட்டுள்ளன.

அத்துடன், முகமாலைத் தாக்குதல் தொடர் பாக முழு விசாரணையொன்றை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என்று மற்றும் ஒரு செய்தி தெரிவிக்கின்றது. இதில் எவ்வித உண்மையும் இல்லை.

முகமாலை முன்னரங்குகளில உள்ள குறைபாடுகள் பற்றியும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றியும் பாதுகாப்புத்துறைச் செயலாளர் படை உயர் அதிகாரி களுடன் கலந்துரையாடினார் என்பதே உண்மையாகும். தமிழீழ விடுதலைப் புலிகள் எவ்விதமான தாக்குதல்களை மேற்கொண்ட போதும் திட்டமிட்ட படி இம்மாதம் 28, 29ஆம் திகதிகளில் ஜெனிவாப் பேச்சுகள் நடைபெறும் என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை.

நாம் சமாதானப் பேச்சுகளுக்கு இணங்கியது தமிழீழ விடுதலைப் புலிகளைத் திருப்திப்படுத்துவதற்காகவல்ல. யுத்தம் காரணமாக அல்லலுறும் தமிழ் மக்களின் துயரங்களுக்கு விடிவு காணும் நோக்கிலேயே இப்பேச்சுக்கு அரசு இணக்கம் தெரிவித்துள்ளது - என்றார் கெஹலிய ரம்புக்வெல. (அ-ஐ)

## பெற்றோல் விநியோகம்

காரைநகர் பிரதேசத்தில் எரிபொருள் பங்கீட்டு அட்டை பெற்ற பொதுமக்களுக்கு இன்று பெற்றோல் விநியோகிக்கப்படவுள்ளது என்று காரைநகர் உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

## புல்லுக்குளத்தை ஆழமாக்கும் பணிகள் ஆரம்பமாகின்றன

யாழ்.முனீஸ்வரன் வீதியோரமாக இருக்கும் புல்லுக்குளத்தை ஆழமாக்கி புனரமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த பல வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படாமல் இருந்த இந்தக் குளம் தற்போது ஆழமாக்கப்பட்டு புனரமைக்கப்பட்டு வருவதோடு குளத்தை சுற்றி அணைக் கட்டும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இந்த [illegible] (17)

# மரண அறிவித்தல்கள்

## வாசுதேவலிங்கம் கமலாதேவி

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வாசுதேவலிங்கம் கமலாதேவி நேற்று (18.10.2006) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பண்ணாகத்தைச் சேர்ந்த அப்பாப்பிள்ளை வாசுதேவலிங்கத்தின் அன்புப் பாரியாரும் காலஞ்சென்ற செந்தில்ராசன் மற்றும் முத்தழகன், அன்பரசி, எழிலரசி ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2006) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கேமாஸ் ஸ்ரோஸ்,**
**பண்ணாகம்.**

**தகவல்:**
**அ.வாசுதேவலிங்கம்**
**(கணவர்).**

## பொன்னையா சபாரட்ணம் (சபா)

*[முன்னாள் சாரதி, இ.போ.ச.]*

36, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த பொன்னையா சபாரட்ணம் நேற்று (18.10.2006) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2006) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**36, செங்குந்தா வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு.**
**தொ.பே. 021 222 9152**

**தகவல்:**
**மனைவி,**
**பிள்ளைகள்.**

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

## செல்வன் லதுஷன்



ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சிவகுமார்-நகுலேஸ்வரி தம்பதியரின் செல்வப் புதல்வன்

**லதுஷன்**

தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் இன்று (19.10.2006) வியாழக்கிழமை வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார். அவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், அண்ணன் (திருலக்ஷன்), அக்கா, மச்சான்மார், மச்சாள் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டுகாலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

19 10 06

ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

**அப்பா,**
**அம்மா.**

# கண்ணீர் அஞ்சலி



இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபன பிரதம பாதுகாப்பு அதிகாரி **கந்தையா தர்மகுலசிங்கம்** அவர்களின் அன்புத் தாய்

**திருமதி கந்தையா கனகம்மா**

அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகிறோம். அன்னாரின் பிரிவினால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

**இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபன**
**கொங்கிறீற் உற்பத்திப் பகுதி, விற்பனைப் பகுதி,**
**விநியோகப் பகுதி, உத்தியோகத்தர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போதைய அவசர தேவை கருதி குறுகிய கால விவசாயத் திட்டங்கள் அறிமுகம்

யாழ்ப்பாணம்,ஒக்.19

குடாநாட்டின் தற்போதைய அவசர தேவையைக் கருத்திற்கொண்டு குறுகிய கால விவசாயத் திட்டங்கள் யாழ். மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதேச காலநிலை மற்றும் புதிய உலக ஒழுங்கிற்கு அமைவாக விவசாயத்தைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தக் கூடியதாகப் புதிய இனங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

ஐ.ஆர்.எஸ்.-1 வெண்வெங்காயம் ஆய்வுகள் மூலம் உருவாக்கப்பட்ட புதிய இனம். இதன் பரீட்சார்த்த செய்கை வெற்றியளித்துள்ளதால் புத்தூர், உரும்பிராய், புலோலி மற்றும் வடமராட்சி கிழக்கு ஆகிய இடங்களில் தற்போது இவை பயிரிடப்படுகின்றன.

எஸ்.ரி.எஸ்.-7 அவரை இனம், மஞ்சள் சித்திரவைரஸ் நோயை எதிர்த்து வளரும் ரி.வி.-8 வெள்ளை இன பால்வெண்டி ஆகியனவும் புதிய அறிமுக இனங்களாகும்.

பழவகைகளை வர்த்தக மயமாக்கும் திட்டமும் உண்டு. வாழைப்பழம், மாம்பழம், கொடிமுந்திரிகை ஆகியவற்றின் வர்த்தகப் பரப்பை விஸ்தரிக்கும் நோக்கத்தில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. நீண்டகாலத் திட்டமாக இது வகுக்கப்பட்டுள்ளது.

குறுகிய காலத்திற்குப் பயன்தரக் கூடிய உணவுப் பாதுகாப்புத் திட்டமும் அமுல்படுத்தப்படுகிறது. அரச சார்பற்ற நிதி நிறுவனங்களின் அனுசரணையுடன் நடைமுறைப்படுத்த 7 திட்டங்கள் ஒழுங்மைக்கப்பட்டுள்ளன.

குரக்கன் உற்பத்தி விரிவாக்கல் திட்டம், வீட்டுத் தோட்ட மரவள்ளித் திட்டம், வற்றாளை அபிவிருத்தித் திட்டம், புரதச் சத்து குறைவை நீக்க இராணி அவரை செய்கை (எஸ்.ரி.எஸ். 1), பயறு, கௌபி போன்ற பயிர்ச் செய்கையை ஏனைப் பயிர்கள் பயிரிடப்படாத நிலங்களிலும் தரிசு நிலங்களுக்கும் விரிவாக்கம் செய்தல், வீட்டுத்தோட்ட அபிவிருத்தி நெல் அறுவடையின் பின் அந்த நிலங்களில் உழவின்றி, எள், பயறு போன்றவற்றை விதைத்தல் என்பனவாகும். இது அவசர கால தேவைக்கான திட்டங்களாகும் - என்று தெரிவிக்கப்பட்டது. (202-88)

## வடமராட்சியிலும் முள்முருக்கை நோய் பெரிய அளவில் பரவ ஆரம்பம்

### அழித்துவிட கால்நடை வைத்தியர் அறிவுறுத்து

கரவெட்டி,ஒக்.19

வடமராட்சியில் முள்முருக்கைகளுக்கு பங்கஸ் நோய் பரவியுள்ளது. இப் பங்கசு கால்நடைகளுக்கும் பாதிப்பு ஏற்படுத்தக் கூடியது என அறிவுறுத்தப்படுகின்றது.

வடமராட்சிப் பிரதேசத்தில் பங்கஸ் நோயால் பாதிக்கப்பட்ட முள்முருக்கை மரங்களை எரித்து அழித்து விடும்படி வடமராட்சி கால்நடை வைத்தியர்கள் அறிவுறுத்தல் விடுக்கின்றனர்.

இந்நோயால் முள்முருக்கை இலைகள் சுருண்டு காய்ந்து போகின்றன. இதனை உண்ணும் கால்நடைகள் நோயுறுவதோடு, இறந்தும் விடுகின்றன.

முள்முருக்கை மரங்களில் குருத்து சுருங்கல், சுருட்டல் தன்மை போன்றவற்றை இனம் கண்டவுடன் அம்மரத்தின் இலைகளை எரித்து விடுவதோடு மரத்தையும் அழிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (202-70)

## 40 விவசாயிகளுக்கு யூரியா கிடைத்தது

வலி.தென்மேற்கு,ஒக்.19

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஒன்பதாம் இலக்க கிளையில் அதிகளவு நுகர்ச்சி பொருள்களைக் கொள்வனவு செய்த சங்க உறுப்பினர்களான விவசாயிகளுக்கு தலா 1/4 அந்தர் (கால் அந்தர்) நிறையுள்ள யூரியா உரம் வழங்கப்பட்டுள்ளது.

நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள 40 விவசாயிகளுக்குத் தமது கிளைக்குக் கிடைத்த யூரியா உரத்தை இவ்வாறு பங்கீடு செய்து கடந்த ஞாயிறுக்கிழமை வழங்கியுள்ளதாகக் கிளையின் தலைவரும், பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவருமான ச.செல்வரத்தினம் தெரிவித்தார். (ப-135)

## கடலில் கைவிடப்பட்டு பழுதடையும் வள்ளங்களை மீட்டெடுக்க உதவுங்கள்

### மண்டைதீவு கடற்றொழிலாளர்களின் கோரிக்கை இது

மண்டைதீவு,ஒக்.19

இரண்டுமாத காலத்திற்கு மேலாக மண்டைதீவு கடற்பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் உள்ள வள்ளங்கள், வலைகள், கட்டுமரங்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை கடலில் இருந்து கரைக்கு கொண்டு வருவதற்கு இயன்றவரை நடவடிக்கை எடுக்குமாறு மண்டைதீவு கடற்றொழிலாளர் சங்கம் சமாசத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக சமாசத் தலைவர் சி. தவரெத்தினத்திடம் கேட்ட பொழுது -

"மாதகல், மண்டைதீவுப் பகுதிகளில் மட்டுமல்ல குடா நாட்டுப் பகுதி முழுவதும் இதே நிலைதான் தொடர்கிறது. கடற்கரையிலும் கடலிலும் தொழிலாளர்களின் தொழில் உபகரணங்கள் கைவிடப்பட்டு பாழடைந்து போயுள்ளன என்று கூறினார்.

மண்டைதீவு கடல் பிரதேசத்தில் எண்பதிற்கு மேற்பட்ட வள்ளங்கள் பாறைகளில் மோதி சேதமடைந்து வருவதாகவும், வலைகளும் மற்றும் உபகரணங்களும் கடலில் இருந்து பழுதாகி வருவதாகவும் அம்மக்கள் சமாசத்திடம் முறையிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (202-88)

## வெளிமாவட்ட கல்விசார் ஊழியர்களின் சம்பளம்

நல்லூர்,ஒக்.19

வெளிமாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் ஆசிரியர்களும் ஏனைய கல்விசார் ஊழியர்களும் இம்மாதத்திற்குரிய சம்பள முற்பணத்தை யாழ். வலயத்தினூடாக வழங்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், இதுகுறித்து வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் இருந்து தமக்கு எவ்வித அறிவிப்புகளும் கிடைக்கவில்லை என யாழ். வலயக் கல்வி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதக் கொடுப்பனவுகள் யாழ். வலயத்தினூடாக வழங்கப்பட்டது தெரிந்ததே. (ப-111)

## பருத்தித்துறையில் பழுதடைந்த பருப்பு விநியோகம் என முறைப்பாடு

உடுப்பிட்டி,ஒக்.19

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடைகளில் பழுதடைந்த பருப்பு வகை விநியோகிக்கப்படுவதாக நுகர்வோர் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறிப்பாக மேற்படி சங்க வர்த்தக நிலையங்களில் 4ஆம் கட்டப் பணத்திற்கான உணவுப் பொருள் விநியோகத்திலேயே பழுதடைந்த பருப்புகள் வழங்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202-155)

## வேலைக்கான உலர் உணவு

வலி.தென்மேற்கு,ஒக்.19

வலி.தென்மேற்கு(சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் (U.N.H.C.R) வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு உலக உணவுத்திட்டப் பிரிவினால் வேலைக்கான உலர் உணவு பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதத்தில் வழங்கப்பட்டிருக்க வேண்டிய இந்த உலர் உணவுப்பொருள்கள் தற்போது இங்கு வந்து சேர்ந்துள்ளதையடுத்து விரைவாகப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ப-135)

## அல்லைப்பிட்டி மண்டைதீவு மக்களுக்கு தீவக லயன்ஸ் கழகம் மருத்துவ உதவி

யாழ்ப்பாணம், ஒக்.19

தீவகத்தில் இருந்து இடம்பெயர்ந்து புனித மரியாள் ஆலய வளாகத்தில் தங்கி இருக்கும் அல்லைப்பிட்டி, மண்டைதீவு மக்களில் நோய்வாய்ப்பட்டுள்ள 300 பேரை வைத்திய பரிசோதனை மூலம் இனங்கண்டு தீவக லயன்ஸ்கழகம் மருந்து வகைகளை இலவசமாக வழங்கி இருப்பதாக தீவக லயன்ஸ் கழக உறுப்பினரும் வேலணை மத்திய கல்லூரி அதிபருமான பொ.அருணகிரிநாதன் உதயனுக்குத் தெரிவித்தார்.

35ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்துகள் இம்மக்களுக்கு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. தீவக லயன்ஸ் கழகத் தலைவரும் உறுப்பினர்களும் இந்த ஏற்பாட்டை செய்திருந்தனர்.

காலை 9 மணி தொடக்கம் பன்னிரண்டு மணி வரை நடந்த இந்த இலவச மருத்துவ முகாமில் டாக்டர் கே.இரத்தினசிங்கம் மற்றும் டாக்டர் காஞ்சனா கெங்காதரன் தலைமையில் மொத்தம் ஏழு வைத்திய நிபுணர்கள் சோதனையில் ஈடுபட்டனர்.

மகப்பேறு, தோல் வியாதி, இரத்த அழுத்தம், நீர் இழிவு, மற்றும் பொது மருத்துவ பரிசோதனைகள் நடைபெற்றன.

ஆஸ்பத்திரி வீதி மூன்று நட்சத்திர ஹோட்டல் உரிமையாளர் லயன்.வி.திருச்செல்வத்தின் அனுசரணையில் இந்த மருத்துவ முகாம் நடைபெற்றது. (ப-88)

## கொத்திவைக்கப்பட்ட விறகை அபேஸ் செய்யும் திருடர்கள்!

கோண்டாவில்,ஒக்.19

கோண்டாவில் மேற்குப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து கொத்திவைக்கப்பட்ட எழுநூற்று ஐம்பது (750/=) ரூபா பெறுமதியான விறகினை திருடர்கள் எடுத்துச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழலை சாதகமாகப் பயன்படுத்தி திருட்டுப் பேர்வழிகள் இந்தச் செயலைப் புரிந்துள்ளனர்.

இவர்கள் பொதுமக்கள் செறிந்து காணப்படும் பகுதிகளிலும், ஊரடங்குவேளைகளிலும் தமது வேலைகளை கச்சிதமாக நிறைவேற்றி வருவதாகக் கூறப்படுகின்றது.

இது போன்ற பல சம்பவங்கள் குடாநாட்டில் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர். (ப-49)

## மேலும் சில பாடசாலைகளின் உயர்தரப் பரீட்சை முடிவுகள்

கடந்த 6ஆம் திகதி வெளியான ஜி.சீ.ஈ உயர் தரப்பரீட்சையின் தமது மாணவர்களின் முன்னணிப் பெறுபேறுகளை மேலும் சில பாடசாலைகளின் அதிபர்கள் உதயனுக்கு அனுப்பி வைத்துள்ளனர்

அவற்றின் விவரம் வருமாறு:-

*இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி*

**கலை**

யோ. அருள்ராஜ்-2ஏசி, ம. யோன்சன் மரின் - ஏ2சி.

**வர்த்தகம்**

செபஸ்ரியன் யோய்- 3பி

**கணிதம்**

த. ரதிகரன்- 3சி

*யாழ்/ மானிப்பாய் இந்துக்கல்லூரி*

**உயிரியல்**

ஜெ. ரஜீவன்- ஏ2பி
சி. சசிதரன்- பி2சி
பா. விஜிதரன்- பி,சி,எஸ்

**கணிதம்**

அ. கோகுலரமணன்- 2பிசி, மு.ரமணன்- பி2சி

**வர்த்தகம்**

க. சயந்தன்- ஏ2பி,சூ. சுஜீபன்- 3பி

**கலை**

ம.சுதர்சன்- 2ஏபி,க. சுகுமார்- ஏ2சி, பு.மயூரன்- 2பிசி, அ. ஜெபநேசன்- ஏபிசி, ஜெ.ஜெயமோகன்- ஏ2சி

*யாழ்/ உரும்பிராய் இந்துக்கல்லூரி*

**கலை**

ந. ராஜாஜி- ஏபிசி,செ.லக்சிகா- ஏபிசி, எ. லலிஸ்- ஏபிசி, டொ. பரீடா- ஏபிசி,ம. சுதர்ஜா- ஏசிஎஸ், ஜெ. ஜெயாளினி- 3பி, க.கர்சனா- 2பிசி, த. பாலாஜினி- 2பிஎஸ், இ.சுகந்தினி- பி2சி

**வர்த்தகம்**

இ. ஆனந்தகுமார்- 3பி
சி. வினோதா- பி2சி

*அளவெட்டி அருணோதயக்கல்லூரி*

**கலை**

கி. கவிதா- 2ஏபி, து. கபினா- 2ஏசி, து.சிவப்பிரியா- 2ஏசி , தி. சிறீறஜிதா- 2ஏசி, கு. தர்சினி- ஏ2பி, இ. லாவண்யா- ஏபிசி, இ. ரேவதி- ஏபிசி, உ. பிரசாந்- 2பிசி, இ.சாளினி- பி2சி

**வர்த்தகம்**

இ. லஜிதா- ஏ2பி, ப. ஜனராஜ்- 3பி, அ.மயூரதி- 2பிசி , செ. வலன்ரினா றஞ்சினி- பி2சி

*பரு.மெதடிஸ்த பெண்கள் பாடசாலை*

**கலை**

தே. நித்யா- 3ஏ, ஜே. கஜேந்தினி- 2ஏபி, ந. வதனரோஜா -2ஏபி, சி. புவனேஸ்வரி- 2ஏபி, அ. சுதர்சனா- 2ஏபி, த. கிரிஜா- ஏ2பி, வை.நிலானி- ஏ2பி பா. நிவேதனா- ஏ2பி, கு.கோபிகா ஏ2பி, வே. கலைப்பிரியா- 2ஏசி, இ. தர்சிகா- 2ஏஎஸ்

**வர்த்தகம்**

யோ. யோகினி- 2ஏபி, அ. சிந்துஜா- 2ஏபி, அ. றெஜினா- 2ஏபி.

**உயிரியல்**

[illegible]- ஏபிசி, கு.பிரேமலதா- 3பி

## கிளைக்கடையை மீண்டும் திறக்க மக்கள் கோரிக்கை

தென்மராட்சி, ஒக்.19

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 16ஆம் இலக்க கிளைக் கடையினை மீண்டும் திறக்குமாறு அப்பகுதி மக்கள் சங்க நிர்வாகத்தினரிடம் கோரியுள்ளனர்.

இக்கிளைக் கடை மூடப்பட்டு வேறு இரு கிளைகளுடன் இணைக்கப்பட்டுள்ளதால் உரிய நேரத்தில் தமது உலர் உணவுப் பொருள்களைப் பெற முடியவில்லை எனவும் மகஜரில் குறிப்பிட்டுள்ளனர்.

கிளைக்கடை பாதுகாப்பு இன்மையாலும், கிளை முகாமையாளர் வீதி விபத்திற்குள்ளாகியதாலும் மூடப்பட்டு ஏனைய கிளைக் கடைகளுடன் இணைக்கப்பட்டதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ப)

## வாசகர், மாணவரிடையே ஆக்கத்திறன் போட்டி

தென்மராட்சி, ஒக்.19

சாவகச்சேரி பிரதேச சபை சரசாலை பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தினையொட்டி மாணவர்கள் மற்றும் வாசகரிடையே போட்டிகளை நடத்தவுள்ளனர்.

போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்கள் அதிபரின் சிபாரிசுடன் எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை நூல்நிலையத்தில் கையளிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## இவர்களுக்கு வாழ்க்கைப் படி கிடைக்கவில்லை

தென்மராட்சி, ஒக் 19

உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கு கடந்த ஜூலை மாதம் வழங்கப்படவேண்டிய வாழ்கைச் செலவுப் படி வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஓய்வூதியருக்கு வாழ்க்கைச் செலவுப் படியாக ரூபா 187 சதம் 50 கடந்த ஜூலை மாதம் தொடக்கம் வழங்கப்பட வேண்டும் என அரசினால் அறிவிக்கப்பட்ட போதிலும் உள்ளூராட்சி ஓய்வூதியர்களுக்கு ஒக்ரோபர் மாதமாகியும் வழங்கப்படவில்லை.

ஏனைய ஓய்வூதியர்களுக்கு ஒக்ரோபர் மாத ஓய்வூதியத்துடன் ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் ஆகிய மாதங்களுக்குரிய நிலுவையுடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் -

கொழும்பிலிருந்து அனுப்பப்படும் உள்ளூராட்சி ஓய்வூதியர்களின் வவுச்சர்களில் வாழ்க்கைச் செலவுப்படி சேர்க்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 5 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

கலைப்புலவர் வீதி,
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
திருச்செல்வம் - கஜேந்தினி
தம்பதியரின் தவப்புதல்வி

## திருல்யா (மான்சி)

இன்று (19.10.2006) வியாழக்கிழமை தனது 5 ஆவது பிறந்த நாளை டென்மார்க்கில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா டென்மார்க்கில் உள்ள சித்தப்பா - சித்தி, தம்பி, அம்மம்மா, மாமா, சித்தி, கனடாவில் உள்ள சித்தப்பா யாழ்ப்பாணத்தில் உள்ள அப்பப்பா, அம்பம்மா, மாமா-மாமி, மச்சாள், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வண்ணை வெங்கடேசன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.



திருல்யா (மான்சி)
19.10.2006

தகவல்:
அப்பப்பா, யாழ்ப்பாண...

### கொடிகாமம் - பரு. மார்க்கத்தில் சிற்றூர்திகளில் கட்டணம் கூடுதலாக அறவீடு

கொடிகாமம் - பருத்தித்துறை பிரதான மார்க்கத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் சிற்றூர்திகள் வழமைக்கு மாறாக கூடுதலான கட்டணம் அறவிடுவதாக பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். சில சமயங்களில் இடத்துக்கிடம் தூர வேறுபாடு இன்றி ஒரே கட்டணம் அறவிடப்படுவதாகவும் கூறப்படுகின்றது. தற்சமயம் தேவையான எரிபொருள் வழங்கப்படும் போது கூடுதலான கட்டணம் அறவிடப்படுவது ஏன் என பயணிகள் கேட்கிறார்கள்.

இதே வேளை, அரச பேருந்து சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையாலும் தனியார் சிற்றூர்திகள் அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றுவதனாலும் பயணிகள் கஷ்டமுறுவதாகக் கூறப்பட்டுகின்றது.(ப-122)

## நெஞ்சைவிட்டகலாத ஈராண்டு நினைவஞ்சலி



| மண்ணக வாழ்வு | விண்ணக வாழ்வு |
|---|---|
| 27 - 12 - 1970 | 19 - 10 - 2004 |

ஆண்டவருடைய இல்லத்தில் நான் வாழ்நாள் முழுவதும் குடியிருக்க வேண்டும்.

### திருமதி பற்றிக்யோன்சன் பௌஸ்ரினா

ஆயிரம் உறவுகள் ஆதரிக்க இருந்தும் அம்மா என்றழைக்க நீங்கள் இல்லையே. விழி கசந்து நாமிருக்க விண்ணோக்கிப் போனதேனோ, அன்பிற்கோர் தாயாகப் பண்புக்கோர் தலைவியாக வழி நடத்திய தெய்வமே தனிமரமாய் நிற்கின்றேன். தவிக்கவிட்டுச் சென்றீரோ? இவரின் ஆன்மா இறைவனின் மகிமைபெறவேண்டி இன்று( 19.10.2006) வியாழக்கிழமை புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (காலை 6.30 மணிக்கு)

38, பீச்றோட், ஈச்சமோட்டை. (54473)

தகவல்:
ப.அருள்ராஜ்.

## நீண்டிடும் நினைவுகள்

| 14 ஆம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு |
|---|---|
| அமரர் நமசிவாயம் நடராசா | திருமதி நடராசா பொன்னம்மா |





| | | |
|---|---|---|
| 16.04.1922 | பிறப்பு | 30.12.1922 |
| 11.11.1992 | இறப்பு | 10.11.2004 |

ஆண்டுகள் ஒடின... உறவுகள் ஒடவில்லை....
மாண்டவர் மீண்டதில்லை.... மானிடர் நியதியிது....
மீண்டிடும் நினைவுகள்...மீட்டிடும் உணர்வுகள்...
வேண்டிடுவோம் இறைவனையே..... ஆத்மா சாந்தியுறவே.

இல.20A, கடற்கரை வீதி,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

மகன், மகள், பெறாமகன்,
மருமகள், பேரர்,
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 19 | 21 |
| 09 | 09 |
| 1923 | 2006 |



### அமரர் சின்னத்தம்பி சின்னாச்சிப்பிள்ளை

காலஞ்சென்ற விவாக, பிறப்பு, இறப்புப் பதிவாளர் க.சின்னத்தம்பி (உடுத்துறை) அவர்களின் அன்பு மனைவி அமரர் திருமதி சின்னத்தம்பி- சின்னாச்சிப்பிள்ளை அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு நாளை(20.10.2006) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

அன்னையின் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'யோகமனை'
உபயகதிர்காமம்,
புலோலி தெற்கு, புலோலி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(சி/511184)

### தவறிவிட்டது

அண்ணா வீதி, பலாலியைச் சேர்ந்த தவகாந்தராசா ஜெரினா என்பவரது விசேட அடையாள அட்டை (0907010369) 17.10.2006 அன்று யாழ் நகரப்பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 56/23, ஆத்திசூடி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

### தவறிவிட்டது

கொழும்புத்துறை, 62/15, நெடுங்குளம் வீதியில் வசிக்கும் சி.நாகேஸ்வரி என்பவரது தேசிய அடையாள அட்டை யாழ். பேருந்து நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கொழும்புத்துறை கிழக்கு தேனீர் கடை மணி அண்ணனிடம் ஒப்படைக்கவும்.

### காணி விற்பனைக்கு

கந்தர்மடம், திருவள்ளுவர் வீதியில் 2 ½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: காலை: 9 மணி
மாலை: 4 மணி
T.P.: 222-2863

## கூட்டுறவுப் பணியாளருக்கு இடர்காலக் கொடுப்பனவு

அரியாலை, ஒக்.19

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு இடர்காலக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த ஒகஸ்ட் மாதம் 11 ஆம் திகதிக்கு பின்னர் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலைக்கு மத்தியில் பணியாற்றிய பணியாளர்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

ஏனைய சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் பணியாளர்களுக்கு இக் கொடுப்பனவுகளை வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்



### பிரமஸ்ரீ கார்த்திகேயர் குருக்கள் இரத்தினகைலாஸநாதர் குருக்கள்

நல்லூர்சிவன் கோயில், சிலாபம் முன்னேஸ்வரம் தேவஸ்தானம் ஆகியவற்றின் பிரதான குருவும் தர்மகர்த்தாவுமாகிய பிரம்ம ஸ்ரீ கா.இரத்தினகைலாஸநாதக் குருக்கள் அவர்கள் கடந்த (17.10.2006) செவ்வாய்கிழமை பின்னிரவு சிவபதமடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(18.10.2006) புதன்கிழமை முன்னேஸ்வரத்தில் இடம்பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அடியவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன்கோயில்,
நல்லூர்.

தகவல்:
ஸ்ரீ.கிருஸ்ணானந்த சர்மா.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| அன்னை மடியில் | ஆண்டவன் மடியில் |
|---|---|
| 09 | 30 |
| 11 | 10 |
| 1938 | 2005 |



### அமரர் ஐயாத்துரை தெட்சணாமூர்த்தி

திதி: திரயோதசி

எம்மையும் எம் பிள்ளைகளையும்
உய்ய வழி நடத்திய அண்ணரே!
எம் உயிர் உள்ளவரை
ஆறாது எம் துயரம்,
வற்றாது எம் கண்ணீர்
நீங்காது உங்கள் நினைவுகள்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எங்கள் குல தெய்வம் முருகன் அருள் புரிவாராக!

சகோதரிகள்,
க.அன்னலட்சுமி,
[illegible]

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.

## சிறுவர் சங்கம நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.19

யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறையில் உள்ள கழகங்களை இணைத்து சிறுவர் சங்கம் நிகழ்வொன்று நடைறெவுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் ஞாயிறு மற்றும் செவ்வாய்க் கிழமைகளில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை தும்பளை [illegible] நடைபெறவுள்ளது.

(202)

Hatton National Bank

## அடகுப்பொருள்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி ஆகிய கிளைகளில் 30.06.2005 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத/காலாவதித்திகதியை நீடிக்க ஆவனசெய்யாத வாடிக்கையாளர்களின் அடகுப்பொருள்கள் 28.10.2006 சனிக்கிழமை அன்று இல.212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்கள் பெறுமதிமிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்,

* கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும்(13,500) செலுத்தி

அல்லது

* தற்போதைய சந்தைப்பெறுமதிக்கும் அதிகரித்த கடன்தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப்பொருள்களை மீள அடகுவைத்து காலவதித்திகதியை நீடித்துக்கொள்ளலாம்.

-முகாமையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்து, பேச்சு, ஊடகம் ஆகியவற்றின்
விடுதலை உரிமைக்காக
உயிர் பறிக்கப்பட்ட உண்மையாளன்

# மயில்வாகனம் நிமலராஜன்

அவர்களின்

## 6 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு

05
06
1961

உதிர்வு

19
10
2000

நீ மரணிக்க வில்லை
நீங்காத நினைவாக
நீக்கமற நிறைந்துள்ளாய்

நிமால் உன் குரல் ஓங்கி ஒலிக்கட்டும்.

உன் நினைவில் வாழும்
குடும்பத்தினர்.

கனடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

*எமது பாடசாலை அதிபர்*

**நாகேந்திரம் கணேசராஜா (SLPS-I)**

(அதிபர். யா/அளவெட்டி சதானந்தா வித்தியாலயம்)

*அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.*

*யா/ அளவெட்டி சதானந்தா வித்தியாலயம்.* (54491) **ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள்.**

# நெஞ்சம் நெகிழ்ந்துருகல்

*எமது கல்லூரியின் முன்னாள் கனிஷ்ட அதிபரும் அளவெட்டி சதானந்தா வித்தியாலய அதிபர்*

**நாகேந்திரம் கணேசராஜா**

*அவர்கள் 18.10 .2006 அன்று காலமான செய்திகேட்டு எமது கல்லூரிச் சமூகம் ஆழ்ந்த கவலையடைகின்றது. அன்னாரின் குடும்பத்தினருடன் துயர் பகிர்வதோடுஅவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

கல்லூரிச் சமூகம்,
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி,
சண்டிலிப்பாய்

(54497)

# 49 ஆம் நாள் நினைவலைகள்



பிறப்பு 13 - 01 - 1979 இறப்பு 01 - 09 - 2006

அமரர்
**சத்தியமூர்த்தி செல்வரூபன்**

*அன்பிற்கு இருப்பிடமே*
*ஆருயிர் ரூபா*
*இன்று வரை உன்னிடத்தை*
*ஈடு செய்ய யாருமில்லை*
*உன்னை ஈன்ற அன்னையுடன்*
*ஊருலகம் விட்டு நீ*
*எங்குதான் சென்றாயோ?*
*ஏங்குகின்றோம்*
*ஐயனே*
*ஒன்றாக வாழ்கையில்*
*ஓடி நீ சென்றாலும்*
*இங்கேதான் நீ*
*இனி என்றும் சாவதில்லை.....*

என்றும் நினைவுகளுடன்:
பணிப்பாளர், பணியாளர்கள்,
சேவாலங்கா மன்றம்,
யாழ்ப்பாணம்.

(54489)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

# இரண்டாவது சிரார்த்ததின நினைவலைகள்

**தோற்றம்** 25 - 12 - 1953



**மறைவு** 10 - 11 - 2004

## திருமதி கமலினி குகதாசன்

**சிரார்த்ததினம் - 19.10.2006**
**திதி: திரயோதசி**

*வண்ண மலரே! வடிவழகே!! எந்தஅது*
*கண்ணுக்குள் நின்று களி நடனம் புரிபவளே!*
*உன்னைக் கரம்பிடித்த ஒவ்வொருநாளுமிங்கே*
*பன்னீரில் நனைகின்ற பக்குவத்தை நானடைய*
*கண்ணீரே என்ன வென காணாது எனை வளர்த்தாய்*
*பெண்ணே நீ செய்தவற்றை பெருமையுடன் சொல்வதற்கோ?*
*விண்ணுலகம் நோக்கி விரைந்து நீ சென்றாயோ?*

*'குககமல வாசம்'*
*காளிகோயிலடி,*
*உடுவில், சுன்னாகம்.* (54485)

என்றும் மறவாத:
குகதாசன் *(கணவர்)*

# மரண அறிவித்தல்

## *வாமதேவன் சந்திரகலா*

(அனலைதீவு மகாவித்தியால மாணவி G.C.E. O/L)



அனலைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வாமதேவன் சந்திரகலா 12.10.2006 அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2006) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அனலைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*4 ஆம் வட்டாரம்,*
*அனலைதீவு மேற்கு.* (54482)

தகவல்:
பிச்சன் வாமதேவன்
*(தந்தை)*

# அதிக சோதனைகளால் மாணவர், ஆசிரியர் சிரமம்

பருத்தித்துறை,ஒக்.19

பருத்தித்துறையில் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள் இராணுவத்தினரின் சோதனைகளுக்குள்ளாவதால் சிரமத்துக்குள்ளாகின்றனர்.

பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்திருக்கும் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவ, மாணவிகளே அதிகளவு சோதனைக்குட்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சோதனைகள் காரணமாக பாடசாலைகள் ஆரம்பிக்கும் நேரத்தில் தாமதம் ஏற்படுவதுடன் மாணவ, மாணவிகளும் ஆசிரியர்களும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதாகவும் பாடசாலை வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

(202-118)

# யுனிசெவ் ஆதரவில் மலசலகூடம் அமைப்பு

வலி.தென்மேற்கு,ஒக்.19

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் யுனிசெவ் நிறுவனத்தின் உதவித் திட்டத்தின் கீழ் கட்டுடை கிராமத்தைச் சேர்ந்த பத்துப் யனாளிகளுக்கு மலசலகூடங்கள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

ஒவ்வொரு மலசலகூடத்திற்கும் 79 ஆயிரம் ரூபா செலவிடப்படும் என்றும், இதில் 65 ஆயிரம் ரூபா வரை யுனிசெவ் நிறுவனம் வழங்கும் என்றும், மிகுதி 14 ஆயிரம் ரூபாவையும் பயனாளிகள் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இக்கிராமத்தில் இத்திட்டத்தின் கீழ் இரண்டு கிணறுகள் புனரமைப்புச் செய்து கொடுக்கப்படவுள்ளன என்றும் புதிய கிணறு ஒன்று அமைக்கப்படவுள்ளது என்றும் தெரியவருகின்றது.

(ப-135)

# எண்ணெய் வாங்க நின்ற முதியவரை ஏமாற்றிப் பணம் பறிப்பு

கோண்டாவில்,ஒக்.19

தேங்காய் எண்ணெய் வாங்குவதற்காக கடை வரிசையில் நின்ற முதியவரை ஏமாற்றி பணம், எண்ணெய் போத்தலுடன் நபர் ஒருவர் தலைமறைவாகிவிட்டார்.

இச்சம்பவம் கடந்த வாரம் திருநெல்வேலி சந்திப்பகுதியில் இடம்பெற்றது. சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

தேங்காய் எண்ணெய் வாங்குவதற்காக நீண்டவரிசையில் முதியவர் ஒருவர் அதிக நேரம் காத்திருந்தார். இதனை அவதானித்த ஏமாற்றுப் பேர்வழி ஒருவர் முதியவரை அணுகி, ஐயா நீங்கள் களைத்துப் போய்விட்டீர்கள் கடையின் ஓரமாக இருங்கள், நான் உங்களுக்கு எண்ணெய் வாங்கித்தருகிறேன் என்று முதியவரிடம் தந்திரமாகப் பேசி 500 ரூபா பணம், எண்ணெய்ப் போத்தல் என்பவற்றை வாங்கிக்கொண்டு சனநெரிசலைச் சாதகமாகப் பயன்படுத்தி தலைமறைவாகி விட்டார்.

சிறிது நேரத்தின் பின் குறித்த நபரைத் தேடிய முதியவர் பணம், போத்தல் என்பவற்றை இழந்த நிலையில் மிகுந்த வருத்தத்துடன் வீடு திரும்பினார். (ப-49)


## அஸ்வினி மல்ரி பிளாசா
## Refugee & Humanitarian Visa

**ஆஸ்திரேலியா, மற்றும் கனடா அரசினால் மனிதநேய அடிப்படையின் கீழ் வழங்கப்படும் நிரந்தர வதிவிட விசா விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.**

**மற்றும் DV-2008 அமெரிக்க லொத்தர் விசாவிற்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.**

**T.P.: 222 5115**
**021 4590630**

ராஜா பிளாசா
புலாலி வீதி,
கோண்டாவில்.


## தவறிவிட்டது

யோசப் தேவதாஸ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (451842188v) அல்லைப்பிட்டியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 16/6, மத்தியூஸ் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

## தவறிவிட்டது

மகேந்திரன் ரஞ்சினிதேவி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (586793403V) யாழ். நகரப்பகுதியில் 18.10.2006 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 134, கண்டி றோட், புங்கன்குளம், அரியாலை என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (சன்மானம் வழங்கப்படும்)


## விற்பனைக்கு

கல்பேட் மொத்தமாக விற்பனைக்கு உண்டு. NKS

631, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.



# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

823 நீலம்

வெற்றி இலக்கங்கள்

**03 26 29 38**

இடபம்

**17-10-2006**

செல்லுபடியாகும் தொடர் இல. 4598222 - 4613844

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 337,989 | 10/- | 3,379,890/- |
| 2 இலக்கங்கள் | 30,969 | 20/- | 619,380/- |
| 1 இல. + லக்கினம் | 30,767 | 30/- | 923,010/- |
| 2 இல. + லக்கினம் | 2,878 | 100/- | 287,800/- |
| 3 இலக்கங்கள் | 823 | 500/- | 411,500/- |
| 3 இல. + லக்கினம் | 72 | 5,000/- | 360,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 6,381,580/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 403,507 | | 7,405,080/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,754,950/-

தொடர் இல. 5486929 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2006 ஒக்டோபர் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பொலன்னறுவை | 4612697-6-22 |
| கொழும்பு | 4612098-9-60 |
| திருகோணமலை | 4603398-7-56 |
| காலி | 4603146-3-53 |
| மொனராகலை | 4599509-9-83 |


# மரண அறிவித்தல்கள்

## *நாகேந்திரம் கணேசராஜா*

(அதிபர் - யா/ சதானந்தா வித்தியாலயம், அளவெட்டி)



சண்டிலிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரம் கணேசராஜா நேற்று (18-10-2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான சின்னப்பு நாகேந்திரம்-தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் விக்னேஸ்வரியின் அன்புக் கணவரும், நிர்மலவதனி (ஜேர்மனி), நிர்மலராஜன், நிர்மலகஜனி, நிர்மலகஜன், ஆகியோரின் அன்புத் தந்தையும், வேல்முருகு பாலகாந்தனின் (ஜேர்மனி) அன்பு மாமனும், டினேஷனின்(ஜேர்மனி) அன்புப் பேரனும், இராமலிங்கம் காலஞ்சென்ற நடராசா மற்றும் இராசா(கனடா), இராசலட்சமி, நவரத்தினம், சிவகுருநாதன், செல்லம்மா, காலம் சென்ற துரைசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நவரத்தினம் (ஓய்வு பெற்ற உப அதிபர்- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்), இராசரத்தினம் (கணக்காளர்- மானிப்பாய் MPCS), பரமேஸ்வரி, சோதிராணி, தவமணி(கனடா), காலஞ்சென்ற ரேணுகாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2006) வியாழக்கிழமை முற்பகல்10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சண்டிலிப்பாய் மேற்கு.* (54484)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

## *கனகசிங்கம் பாஸ்கரன் (பாஸ்)*



நல்லூர், சங்கிலியன் வீதியைப் பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும் கொண்ட கனகசிங்கம் பாஸ்கரன் 17.10.2006 செவ்வாய்க்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசிங்கம்-இராசமணி தம்பதியரின் அருமை மகனும் ஜெகவாசினியின் அன்புக் கணவரும் நயினாதீவு 5 ஆம் வட்டாரம் கனகரத்தினம்-மகேஸ்வரி தம்பதியரின் அருமை மருமகனும் கனகேஸ்வரி, கனகேஸ்வரன், ஹரிகரன், கௌரீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சண்முகரத்தினம், சுகந்தினி,மாலினி, முரளி, சிவபாலன், சத்தியபாலன், ஜெகதீஸ்வரி, ஜெகவதனி,கேதாரகௌரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவகுமார்,பாஸ்கரன், பஞ்சலிங்கம் ஆகியோரின் சகலனும் மகேந்திரனின் மருமகனும் கமலாதேவி, நாகேஸ்வரி, தியாகேஸ்வரி மற்றும் வைத்திலிங்கம் செல்லம்மா ஆகியோரின் பெறாமகனும் மயூரணி, சுகந்தியன்,சுகிர்தியா, நிகேதன்,பிரவின்,வருணன், ஹரிணி,நிசானி ஆகியோரின் பாசமிகு மாமனும் திகேசன், வைதிகா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2006) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணிஇந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**16, சங்கிலியன் வீதி,**
**நல்லூர்.** (54490)

தகவல்:
க.இராசமணி *(தாய்)*,
வாசினி *(மனைவி)*,
கனகரத்தினம் *(மாமன்-நயினாதீவு)*.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# நீதி செய்ய மஹிந்தருக்கு ஒரு வாய்ப்பு

'மாற்றுருவிலும் ஆசீர்வாதம்' (Blessing in disguise) என்று ஒரு முதுமொழி உண்டு.

வடக்கு - கிழக்கைப் பிரிக்கும் இலங்கை உயர் நீதிமன்றத்தின் மிக முக்கிய தீர்ப்பு, தங்களது நியாயமான உரிமைகளுக்காகப் போராடும் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில், அவர்களது மாற்ற முடியாத நிலைப்பாட்டுக்கு விழுந்த பேரிடி - பேரடி - என்றாலும், அந்த இழப்புக்கு மத்தியிலும் இரண்டு வகையில் அது ஆசீர்வாதம் தரும் முடிவு என்றும் கூறலாம்.

ஒன்று - தமிழர்களின் தனி சுயாட்சி அலகுக்கான போராட்டத்தை இத்தீர்ப்பு நியாயப்படுத்துகின்றது.

மற்றது - ஈழத் தமிழர்களுக்கு நியாயம் வழங்குவோம் என்பதை தென்னிலங்கைச் சிங்களம் சர்வதேசத்துக்கு வெளிப்படுத்துவதற்கு இறுதி வாய்ப்பு - கடைசிச் சந்தர்ப்பம் - ஒன்றை இத்தீர்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது.

தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கு காலாதி காலமாகக் காணப்பட்ட உடன்பாடுகள், இணக்கங்களை முறித்து சிறுபான்மையினரை ஏமாற்றியவர்கள் பேரினவாதிகளே என்பது கண்கூடு. அதுவே, கடந்த கால வரலாறு.

அதே தொடர்கதை தான் இப்போது நீதிமன்றத்தின் பெயராலும் - சட்ட நடவடிக்கைகளின்வாயிலாகவும் - அரங்கேறியிருக்கின்றது.

தமிழர்களுக்கு ஒரு சொட்டு நியாயமேனும் கிடைப்பதை ஏதோ ஒரு வழி மூலம் - தந்திரம் வாயிலாக - சிங்களவர்கள் தடுத்து விடுவார்கள் என்பதை நிரூபிக்கும் ஒரு சான்றாக இந்த விடயத்தை சர்வதேசத்தின் முன்வைக்கின்றார்கள் தமிழர்கள்.

அதேசமயம், பிரிந்து சென்று சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனியரசு ஒன்றை நிறுவுவதன் மூலமே ஈழத் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கும் என்றும், அமைதி வழி முயற்சிகள் மூலம் இணக்கத் தீர்வு ஒன்றை எட்டுவதற்கோ அல்லது எட்டிய தீர்வை நீதி, நியாயத்துடனும், இதய சுத்தியுடனும் நடைமுறைப்படுத்துவதற்கோ தென்னிலங்கைச் சிங்களம் இணங்கவே மாட்டாது என்றும் தமிழர் தரப்பில் தீவிரப் போக்குடையோர் முன்வைக்கும் கருத்தை இந்த விவகாரம் - இத் தீர்ப்பின் பெறுபேறு - உறுதிப்படுத்தியிருக்கின்றது.

சரி. தீர்ப்பு முடிவடைந்த விவகாரம். ஆனால் இந்தத் தீர்ப்பு மூலம் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தாம், அமைதித் தீர்வுக்குரிய மனவிசாலத்துடனும், உறுதியுடனும், திடசங்கற்பத்துடனும் உள்ளார் என்பதை வெளிப்படுத்த ஜனாதிபதி மஹிந்த முயல்வாரா என்ற கேள்வி எழுகிறது. அதற்கான அருமையான வாய்ப்பு அவருக்குக் கிட்டியிருப்பது புலனாகின்றது.

வடக்கு - கிழக்கு இணைப்புக்காக 1988 இல் அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலை செல்லுபடியற்றது, சட்ட முரணானது என்று தீர்ப்பளித்த உயர் நீதிமன்றம் அதே வேளை, அத்தகைய இணைப்பை நாடாளுமன்றச் சட்டம் மூலம் மேற்கொள்ளலாம் என்பதைக் கோடி காட்டவும் தவறவில்லை.

இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு சட்ட அங்கீகாரம் பெற அரசு முயலுமானால் அதற்கு முழு ஒத்துழைப்புத் தரத் தயாராக இருப்பதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் பகிரங்கமாக அறிவித்திருக்கின்றது.

அத்தகைய முயற்சி எடுக்கப்படுமானால், அதற்கான சட்ட மூலத்துக்கு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் முழுத் தமிழ் எம்.பிக்களுமே - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா உட்பட 24 எம்.பிக்களுமே - ஒட்டுமொத்தமாக ஆதரவு தருவார்கள் என்பதும் உறுதி.

ஆக, இது விடயத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆளும் தரப்புத்தான் ஒரு முடிவை எடுக்க வேண்டும்.

வடக்க - கிழக்கு இணைப்பை உறுதிப்படுத்துவதற்கான சட்ட மூலத்துக்கு ஆளும் தரப்பு இணங்கி, அதைப் பிரேரிக்குமானால் எதிரணியில் உள்ள ஐ.தே.க. மற்றும் தமிழ் எம்.பிக்களின் ஒட்டு மொத்த ஆதரவுடன் அந்தச் சட்ட மூலத்துக்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவைக் கூட இலகுவாகப் பெறமுடியும் என்பதும் நிச்சயம்.

ஆக, அத்தகைய சட்ட மூலத்தைக் கொண்டு வர அரசுத் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தயாரா என்பதே இப்போதுள்ள கேள்வி.

தமிழர் தாயகத்தைத் துண்டாடும் பௌத்த - சிங்கள மேலாண்மைப் போக்கும், பேரினவாதக் குள்ளநரித்தனமும் தம்மிடம் இல்லை என்பதை வெளிப்படுத்தவும் -

சிறுபான்மையினரான தமிழர்களுக்கு நியாயம் செய்யும் மன விசாலமும், தாராளப் போக்கும் கொண்ட தேசியத் தலைவர் தாம் என்பதை சர்வதேச சமூகத்துக்கு நிரூபிக்கவும் -

ஜனாதிபதி மஹிந்தருக்குக் கிடைத்த அருமையான சந்தர்ப்பம் இது.

அதுவும், எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் ஜெனிவாவில் அரசுத் தரப்புக்கும், புலிகளுக்கும் இடையிலான உத்தேச அமைதிப் பேச்சுகள் நடக்கவிருக்கையில் - இரு தரப்புகளுக்கும் இடையிலான பகையுறவும், விரோதமும் முற்றியுள்ள சூழ்நிலையில் -

அதற்கு முன்னர் இது பற்றிய சாதகமான முடிவை - தீர்மானத்தை - முன் அறிவிப்பாக ஜனாதிபதி மஹிந்தர் விடுப்பாரானால், அது அமைதிப் பேச்சுக்கான உகந்த சூழ்நிலையை மேம்படுத்துவதற்கு உதவியான ஒரு விடயமாக அமையும்.

அதேசமயம் -

நீதிமன்றத் தீர்ப்பு மூலம் துண்டிக்கப்படும் வடக்கு - கிழக்கு மாகாணங்களை - அதாவது தமிழர் தாயகத்தை - விசேட சட்டத்தின் மூலம் ஒன்றிணைக்க வாய்ப்பிருந்தும் -

அதற்கான வழிகாட்டுதலை நீதிமன்றம் தனது தீர்ப்பில் கோடி காட்டியும் -

அதற்கான சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கும் தேவையான முழு ஒத்துழைப்பையும் நாடாளுமன்றக் கட்சிகள் தரத் தயாராக இருந்தும் -

அதனைச் செய்வதற்கு ஜனாதிபதி மஹிந்தர் தவறுவாரேயானால், அவர் முழு அளவில் ஒரு பேரினவாதி என சர்வதேசத்திலும் அடையாளம் காணப்படுவார். அதுதான் மெய்மை நிலை.

வடக்குடன் இணைவது என்பதை கிழக்கு மக்களே தீர்மானிக்க வேண்டும் என்றும், அரசியல்வாதிகளோ, நாடாளுமன்றமோ, நிறை வேற்று அதிகாரமோ அல்லது நீதிமன்றமோ அதைத் தீர்மானிக்க முடியாது என்றும் அவர் நியாயம் பிளந்து, இந்த விடயத்தில் சட்ட மூலம் கொண்டு வரும் முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டுத் தடுப்பாரேயானால், தங்கள் தாயகத்தைக் காப்பதற்கான தமிழர்களின் எழுச்சிப் போராட்டத்தைத் தாமும் நியாயப்படுத்தியவராவார் என்பதை யும் அவர் உணர்ந்து கொள்வது நல்லது.

# குண்டுவீசி வானொலிச் சேவையை தடுக்க நினைப்பது அரசின் அறிவீனம்!

## எம்.பிக்கள் மூவர் கூட்டறிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.19

புலிகளின் குரல்வானொலி நிலையத்தின் மீது அரசாங்க விமானப்படை குண்டு வீசி அழித்ததைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர். தாக்குதல் மூலம் வானொலிச் சேவையை தடுக்கலாம் என்று அரசு நினைக்குமானால் அது அறிவீனமே என்று அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான கி.சிவநேசன், திருமதி பத்மினி சிதம்பரநாதன், செ.கஜேந்திரன் ஆகியோர் நேற்று முன்தினம் கூட்டாக விடுத்த கண்டன அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழீழ வானொலி மீது அதன் சேவைகளை பெற்று வரும் மக்களுக்கு உண்மைச் செய்திகள் சென்றடைவதைத் தடுக்கும் நோக்கமாகப் பேரினவாத அரசின் வான்படைகள் குண்டு வீசி நேரடித் தாக்குதலை நடத்தியமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

விடுதலைப் போராட்டத்தின் போது பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலும், இடம்பெயர் சூழல்களிலும் இலங்கைப் பேரினவாத அரசு செய்திகளை தணிக்கை செய்து தமக்குச் சாதகமான பொய்ச் செய்திகளை மக்களிற்கு பரப்பிவந்த வேளையில்-

விடுதலைப் போராட்டத்தினை வேகப்படுத்துவதற்கானதும், தமிழர் தம் கலை, கலாசார, பண்பாட்டினைப் பாதுகாத்து அவற்றை வளர்த்துக் கொள்ளவும், அரசியல் கருத்துக்களையும், தமிழ்மொழி, இலக்கியம் என்பவற்றின் வளர்ச்சிக்காகவும் அயராது பணியாற்றுவதுடன் பொருண்மிய மேம்பாட்டிற்கும் அளப்பரிய சேவை செய்வதோடு-

போராட்ட வேளைகளில் களநிலைகள் பற்றிய உண்மைத் தகவல்களை உடனுக்குடன் பக்கச் சார்பின்றி, நடுநிலை தவறாமல், தமிழ் பேசும் மக்களுக்கு தெரியப்படுத்தும் ஒரே ஒரு ஒலிபரப்பாகவும், எமது மக்களின் மனங்களில் தமக்கான ஓர் இடத்தைப் பிடித்துள்ள எமது வானொலி மீது திட்டமிட்டு தாக்குதல் நடத்தப்பட்டது கொடூரம் நிறைந்த செயலாகும்.

தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் உண்மைச் செய்தியினை தெரியப்படுத்தும் நோக்கில் சிங்கள மொழி மூலமான நிகழ்ச்சிகளை வழங்கி சிங்கள மக்கள் மத்தியிலும் சிங்களப் படைகள் மத்தியிலும் தகவல்களை வழங்கும் எமது வானொலியின் சேவையை முற்றாக சேதமாக்கும் நோக்கோடு அரசு இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளது. அதன் மூலம் வானொலிச் சேவையை தடுக்கலாம் என்று அரசு நினைக்குமானால் அது அறிவீனமே.

- என்று உள்ளது.

## மரவள்ளிக்கிழங்கு திருடப்படுவது குறித்து விவசாயிகள் கவலை

வலி தென் மேற்கு,ஒக்.19

பண்டத்தரிப்பு பகுதியில் வயல் காணிகளில் விவசாயிகள் உற்பத்தி செய்த மரவள்ளிக்கிழங்குகள் திருடப்பட்டு வருவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய உணவு தட்டுப்பாட்டு நிலமையால் மரவள்ளிக்கிழங்குக்கு அதிக மவுசு ஏற்பட்டுள்ளது, சந்தைகளில் இவற்றின் விலையும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், தாம் கஷ்டப்பட்டு விளைவித்த மரவள்ளிக்கிழங்குகள் திருட்டுப்போவது குறித்து விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். (135)

# தன்னின மக்களின் உரிமைகளுக்காக ஓங்கி குரல் கொடுத்தவர் நிமலராஜன்

## வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் அனுதாபம்

யாழ்ப்பாணம், ஒக்.19

தன்னின மக்களின் உரிமைகளுக்காக ஓங்கி குரல்கொடுத்த உன்னத ஊடகவியலாளன் நிமலராஜன்.

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 6ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் விடுத்த செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது விடயமாக அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஊடகவியலாளர் அமரர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் ஆறு ஆண்டுகள் கடக்கின்றன. ஊடகவியலாளர் நிமலராஜன் தமிழ்பேசும் மக்களின் உணர்வுகளுடன் ஒன்றாகிப்போனவர்.

அமரர் நிமலராஜன் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளமையானது ஒட்டுமொத்த சமூகத்திடையேயும் அதிருப்தியையே வெளிப்படுத்தியிருக்கின்றது. குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த ஆவண செய்யப்படவேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

தனது மக்களிற்காக அஞ்சாது இறுதி வரை குரல்கொடுத்த அந்த உத்தமனை இந்நாளில் நாம் நினைவு கூருவதுடன், அவரின் கொலைச் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் விரைந்து நிறுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம். - என்று அதில் உள்ளது.

# வீதி திருத்தப் பணிகளுக்கு தார் இல்லை ரூ.30 லட்சம் நிதி மீளத் திரும்பும் நிலை

## யாழ்.மாநகர ஆணையாளர் சுட்டிக்காட்டு

நல்லூர், ஒக்.19

வீதி திருத்தப் பணிகளை மேற்கொள்வதற்கான தார் போன்ற சில மூலப் பொருள்கள் இன்மையால் வீதி புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் -

இதனால் சுமார் 30 லட்சம் ரூபா வரையிலான நிதி திரும்பிச் செல்லக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் -

யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

இது விடயமாக மாநகர ஆணையாளர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றுள்ள நிலையில் யாழ்ப்பாணப் பகுதியை ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடமுடியாது. இங்கு மிகவும் கஷ்டமான சூழ்நிலை நிலவுகிறது. இந்த வேளையில் தேவையான மூலப் பொருள்கள் இன்றிஅபிவிருத்தி நடவடிக்கைகளை நிறைவேற்றுவது என்பது இலகுவானதல்ல.

எனவே, அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதி, அதன் கால எல்லை முடிவுற்றதாகக் கூறி மீளளிக்கப்படுவது குறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சிக்கப்படும்.

போதிய ஒப்பந்தகாரர்கள் இன்மையால் வீதி புனரமைப்பு பணிக்கான வேலைக்கான கேள்விப்பத்திரங்களும் இம்முறை குறைந்த அளவிலேயே கிடைத்துள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (111)

## நவம்பர் 4 ஆம் திகதி புலமைப் பரிசில் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக்.19

யாழ். மாவட்டத்தில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையை அடுத்த மாதம் 4 ஆம் திகதி நடத்துவதற்கு யாழ். கல்வித் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்தப் பரீட்சைக்கான நிலையங்கள் தெரிவு செய்தல் மற்றும் ஏற்பாடுகளை யாழ். கல்வி வலயம் செய்து வருகின்றது.

குடாநாட்டில் ஓகஸ்ட் 11 ஆம் திகதி உருவான அசாதாரண சூழ்நிலை காரணமாக மறுநாள் நடைபெற வேண்டிய பரீட்சை நடைபெறவில்லை. இந்தப் பரீட்சையை நடத்துவது தொடர்பாக அறிவுறுத்தல்கள் யாழ். கல்வித்திணைக்களத்துக்கு கிடைத்துள்ளன என்றும்-

வினாத்தாள்களை எடுத்துவர கல்வித் திணைக்கள அதிகாரிகள் அடுத்த வாரம் கொழும்பு செல்லவுள்ளனர் என்றும்- தெரிவிக்கப்பட்டது. (1)

## கிராம அலுவலர் இடமாற்றம்

தென்மராட்சி,ஒக்.19

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் கடமையாற்றும் இரண்டு கிராம அலுவலர்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

ரி.நந்தகுமார், எஸ்.சிவபாலசுந்தரம் ஆகியோரே இடமாற்றம் செய்யப்பட்டுள்ள கிராம அலுவலர்களாவர்.

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் 24கிராம அலுவலர் பதவிகள் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் வெற்றிடமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அனுமதி அட்டைகள் தாமதமாகக் கிடைத்ததால் தடைதாண்டல் பரீட்சையில் தோற்றமுடியாத நிலை

## யாழ். அதிபர்கள் விசனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.19

அதிபர்களுக்கான வினைத்திறமை காண் தடைதாண்டல் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் யாழ். மாவட்ட பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைத் தினத்தன்றே கிடைத்தமையால் அவர்கள் பரீட்சைக்குத் தோற்றமுடியாத நிலை ஏற்பட்டது 'என அதிபர்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பரீட்சை கடந்த சனிக்கிழமை கொழும்பில் நடைபெற்றது. இப்பரீட்சைக்கென யாழ். மாவட்டத்திலிருந்து நூற்றுக்கணக்கான அதிபர்கள் விண்ணப்பித்திருந்தனர்.

இவர்களுக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை நடைபெற்ற தினத்தன்றே - கடந்த சனிக்கிழமையே - தபாலில் கிடைத்துள்ளது.

கடந்த காலங்களில் இப்பரீட்சை யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றுவந்தது. ஆயினும், கடந்த 3 வருடங்களாக இப்பரீட்சை கொழும்பிலேயே நடத்தப்படுகின்றது.

இப்பரீட்சைக்குத் தோற்ற முடியாததால் யாழ். மாவட்ட அதிபர்கள் பலர் சம்பள உயர்வைப் பெறுவதில் தடங்கல்கள் ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (202-182)

# நீர்வேலிப் பகுதி விவசாயிகளுக்கு விவசாய அட்டைக்கு மண்ணெண்ணெய்

அரியாலை, ஒக்.19

நீர்வேலி பகுதி விவசாயிகளுக்கு அடுத்தவாரம் தொடக்கம் விவசாய அட்டைக்கு மண்எண்ணெய் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

விவசாய அட்டை வைத்திருப்போருக்கு பரப்புக்கு அரை லீற்றர் வீதம் மண்எண்ணெய் விநியோகிக்கப்படும் என்று நீர்வேலி தெற்கு விவசாய சம்மேளனத்தினர் தெரிவித்தனர்.

இதேசமயம்- பரப்பு அரை லீற்றர் வீதம் விநியோகிக்கப்பட இருக்கும் இந்த மண்எண்ணெய் தமது விவசாய நடவடிக்கைகளுக்கு முழுமையாகப் போதாது என்று விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலி கடற்படைத்தளம் மீதான தாக்குதலையடுத்து தமிழருக்குச் சொந்தமான கடைகள் தாக்கி அழிக்கப்படுவதையும் துறைமுகப்பகுதியில் காவலுக்குநின்ற படையினரையும் படங்களில் காணலாம்.

# பல்குழல் எறிகணையால் அரசுக்கு நிமிடத்துக்கு 7 கோடி ரூபா செலவு!

அரசு மேற்கொண்டுவரும் பல்குழல் எறிகணை (மல்டிபரல்) தாக்குதல் மூலம் ஒரு நிமிடத்துக்கு 7 கோடி 20 லட்சம் ரூபாவை அது அநியாயமாகச் செலவிடுகிறது. இதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கான நிதி அழிந்துபோவதற்கு இந்த நாட்டின் எதிர்காலமும் அழிந்துபோகிறது. இதை உடனடியாக நிறுத்தி சமாதானத்தை நிலைநாட்ட அரசு முன்வரவேண்டும். - இவ்வாறு ஐ.தே.கவின் எம்.பி. தயாசிறி ஜயசேகர நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற இலங்கை சர்வதேச நாடுகளிடம் பெறும் கடன் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணையில் உரையாற்றும்போது கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரசு கண்மூடித்தனமான தாக்குதல் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இதன் காரணமாக ஒரு நாளைக்கு கோடிக்கணக்கான ரூபா பணம் செலவாகிறது.

உதாரணமாக ஒரு 'மல்டிபரல்' மூலம் ஒரு தடவை (ஒரு நிமிடம்) தாக்குதல் நடத்த 36 லட்சம் ரூபா செலவாகிறது. மல்டி பரல் ஒன்றில் 40 குழாய்கள் உள்ளன. இதற்குப் பாவிக்கும் குண்டு ஒன்றின் விலை 90 ஆயிரம் ரூபா. ஒரு நிமிடத்தில் அதாவது ஒரு தடவையில் 40 குண்டுகள் இம் மல்டிபரல் மூலம் வீசப்படுகின்றன. இதனால், ஒரு தடவையில் 36 லட்சம் ரூபா செலவாகிறது.

அவ்வாறு ஒவ்வொன்றிலும் 40 குழல்கள் தாங்கிய 20 மல்டி பரல்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு நிமிடத்தில் இந்த 20 மல்டி பரல்களையும் இயக்கும்போது மொத்தம் 7 கோடி 20 லட்சம் ரூபா பணம் விரயமாகின்றது. இதுபோல் தொடர்ந்து தாக்குதல் நடத்தும்போது பலகோடி ரூபா பணம் செலவாகிறது - என்றார். (த)

## கரடியனாறில் விமானக் குண்டுவீச்சு!

மட்டக்களப்பு மாவட்டத்தின் கரடியனாறு பால்சேனை கிராமத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் இடம்பெற்ற விமானக்குண்டு வீச்சுத்தாக்குதலில் பெண் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் இருவர் காயமடைந்தனர்.

சம்பவத்தில் கொல்லப்பட்டவர் வைரமுத்து அரசம்மா (வயது-52) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குண்டுவீச்சுச் சம்பவத்தில் ரொசான் (வயது-38), கோபு (வயது-20) ஆகிய இருவரும் காயமடைந்துள்ளனர்.

இதற்கிடையில் மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியில் புதன்கிழமை மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வாகனப் போக்குவரத்துச் சேவைகள் இடம்பெற்றன. (ஐ-134)

## தாக்குதல்கள் நீடிக்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார். இதன் அடிப்படையில் எமது தலைமைப்பீடம் சமரச வழியில் தீர்வைக் காண அர்ப்பணிப்புடன் இருக்கின்றது.

அமைதி முயற்சிகளில் எங்களுடைய அர்ப்பணிப்பையும் ஈடுபாட்டையும் ஜப்பானிய சிறப்புத் தூதுவரிடம் தெரிவித்திருக்கின்றோம். ஸ்ரீலங்கா அரசும் அமைதி முயற்சிகளுக்கு மதிப்பளித்து சர்வதேச சமூகத்தினுடைய வேண்டுகோளுக்கும் அதன் விருப்பங்களுக்கும் மதிப்பளித்து நடக்குமானால் பேச்சுகள், சந்திப்புகள் சாத்தியப்படலாம்.

பேச்சுக்குச் செல்லும் எமது நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை.

ஏற்கனவே இணைத்தலைமை நாடுகள், இரண்டு தரப்பும் சந்தித்துப் பேச வேண்டும்என்பதற்குஅமையஎங்களுடைய இணக்கப்பாட்டைதெரிவித்திருக்கின்றோம்.

எங்கள் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. எதிர்வரும் நாட்களுக்குள் ஸ்ரீலங்கா அரசு எடுக்கின்ற நடவடிக்கைகள் தான் பேச்சுகள் நடைபெறுவதைத் தீர்மானிக்கும். எங்கள் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமுமில்லை.

பேச்சுகளின் ஊடாகத்தான் என்ன தீர்வு என்பதை நாம் முடிவெடுக்க முடியும். தற்போது தீவிரமான மோதல்கள், உயிரிழப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழலில் அரசியல் தீர்வைப்பற்றி சிந்திக்க முடியாதவர்களாக உள்ளோம்.

**எதிர்வரும் நாள்களில் நடைபெறும் நிகழ்வுகளே மாற்றங்களைத் தீர்மானிக்கும்**

உடனடியாக மோதல்களை முடிவுக்குக் கொண்டுவந்து எமது மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கின்ற படுகொலைகள், படை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு இயல்பு நிலைமையை உருவாக்க வேண்டும் என்பதுடன் முதலில் மனிதாபிமானப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு ஒரு இயல்பு நிலைமையைக் கொண்டு வருவதுதான் முக்கிய விடயமாகவுள்ளது.

இரண்டு தரப்பும் பேச்சு மேசையில் சந்திக்க வேண்டும் என்று இன்று கூட ஜப்பானிய சிறப்புத் தூதுவர் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார். நாமும் எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாட்டை விளக்கினோம்.

ஸ்ரீலங்கா அரசு வான் தாக்குதல் உட்பட அனைத்துத் தாக்குதல்களையும் நிறுத்தி நல்லெண்ண வெளிப்பாடாகச் செயற்படுமாக இருந்தால் நாமும் பூரணமாக ஒத்துழைப்புத் தரத் தயாராக இருக்கின்றோம் என்பதை தெரிவித்திருக்கின்றோம்.

ஒரு தரப்பு என்ற வகையில் எமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த தயாராக இருக்கின்றோம். அரசதரப்பிடம் இருந்து நல்லெண்ண சமிக்ஞைகள் எதுவும் கிடைக்காத நிலையில்தான் தீவிரமான மோதல்களும், வன்முறைகளும் உருவாகி இருக்கின்றன.

குறிப்பாக தமிழ் மக்கள் மீதான வான் தாக்குதல்களும், மக்கள் காணாமல் போகின்ற சம்பவங்களும் நீடிக்கின்றன. பாதைகள் மூடப்பட்ட நிலையில் பெரும் அவலத்துக்குள் மக்கள் தள்ளப்பட்டு இருக்கின்றார்கள்.

மக்களின் அவலம் தீர்க்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தினோம். ஜப்பானிய சிறப்புத்தூதுவரும் எமது கருத்துக்களை ஏற்றுக்கொண்டார்.

ஜெனிவாப் பேச்சுகளில் நாம் கலந்து கொள்வதை எதிர்வரும் நாட்கள்தான் தீர்மானிக்கும். எங்களுடைய முடிவில் இது வரை எதுவித மாற்றமும் இல்லை. எதிர்வரும் நாட்களில் நடைபெறும் நிகழ்வுகள் தான் அந்த மாற்றங்களைத் தீர்மானிக்கும் - என்றார் சு.ப.தமிழ்ச்செல்வன். (ஐ4)

## காலி துறைமுகத்துக்குள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காலி துறைமுகத்தினுள் அமைந்திருக்கும் 'தக்ஷின' கடற்படைத் தளம் மீதே நேற்று இந்தத் திகில் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. நேற்றுக் காலை காலி கடற்பரப்பில் தொழிலுக்காக மீன்பிடிப் படகுகள் புறப்படும் சமயத்தில் ஐந்து படகுகளில் வந்த சுமார் பதினைந்து பேர் அடங்கிய அணி என்று கூறப்படும் தாக்குதலாளிகள் படகுகளோடு துறைமுகத்தினுள் திடீரென நுழைந்து படகுகளை வெடிக்க வைத்து மின்னல் வேகத்தில் தாக்குதல் நடத்தினர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுமார் 7.15 மணியளவில் துறைமுகத்தினுள் முதலாவது பெரும் வெடி ஓசை கேட்டது. தொடர்ந்து மேலும் வெடிப்புச் சத்தங்களும், வேட்டொலிகளும் அந்தப் பிரதேசத்தை அதிர வைத்தன.

வெடிகுண்டு ஏற்றிய ஐந்து படகுகளில், மூன்று படகுகள் கடற்படைத் தளத்தில் நங்கூரமிட்டிருந்த கடற்படையின் 'வோட்டர் ஜெற்' படகுகளோடு மோதி வெடித்துச் சிதறின என்றும், ஏனைய இரண்டு படகுகளும் கடற்படைத் தளத்தின் கரையை நெருங்கி படை நிலைகள் மீது 'ஆர்.பி.ஜி. றொக்கெட்' தாக்குதல்களை நடத்தின என்றும் பாதுகாப்பு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

துறைமுகப் பகுதியினுள் தரையிறங்கிய தாக்குதலாளிகள் அங்கு நீண்ட நேரமாகத் தாக்குதல்களைத் தொடுத்தனர் என்று கூறுப்படுகிறது.

ஆர்.பி.ஜி. றொக்கெட்டுகள், இயந்திரத் துப்பாக்கிகளைப் பயன்படுத்தி படை நிலைகள் மீது தாக்குதல் நடத்தினர் என்றும் அங்கிருந்த கடற்படையினரும் பதில் தாக்குதல்களை மேற்கொண்டனர் என்றும் கூறப்படுகிறது.

**மீனவர் படகுகளோடு தாக்குதல் படகுகள் வந்தன**

காலி துறைமுகத்தினுள் நுழைந்த படகுகள், மீனவர் படகுகளோடு படகுகளாக மறைந்து அங்கு வந்தன என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

துறைமுகப் பகுதியில் மீன்பிடிப் பதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருப்பதால் அப்பகுதிக் கடலில் தொழிலில் ஈடுபடும் மீனவர் படகுகளுக்கு விசேட அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அவ்வாறு அனுமதி பெற்ற மீனவர் படகுகள் நேற்றுக் காலை தொழிலில் ஈடுபடுவதற்காகக் கடலில் இறங்கிய சமயத்திலேயே தாக்குதலாளிகளின் படகுகளும் அப்பகுதிக்கு வந்துள்ளன என்று கூறப்படுகிறது.

வெடி குண்டுகள் நிரப்பிய ஐந்து படகுகளும் திடீரெனத் துறைமுகப் பகுதிக்குள் நுழைந்து கொண்டதை அடுத்தே அங்கு மோதல் வெடித்தது.

மீன்பிடிப் படகுகளோடு மறைந்து வந்த கடற்புலிகளின் ஐந்து படகுகளே 'தக்ஷின' கடற்படைத் தளம் மீது தாக்குதல் தொடுத்தன என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

கடற்புலிகளின் படகுகளில் மூன்றைக் கடற்படையினர் தாக்கி அழித்தனர் என்றும், ஏனைய இரண்டு படகுகளும் துறைமுக நுழைவாயில் பகுதியில் தம்பாட்டில் வெடித்துச் சிதறின என்றும் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையை மேற்கோள் காட்டி 'ரொய்ட்டர்' செய்தி தெரிவித்தது.

தாக்குதல் ஆரம்பித்து அந்தப் பகுதி குண்டுச் சத்தங்களால் அதிரத் தொடங்கவே கடலில் தொழிலுக்காகச் சென்ற மீனவர்கள் உடனடியாகக் கரைதிரும்பி தரைப்பகுதிகளுக்கு ஓடத் தொடங்கினர் என்றும் கூறப்படுகிறது.

காலி துறைமுகப் பகுதியில் உள்ள சிறு மலைக் குன்றுப்பகுதியை நோக்கி மீனவர்கள் ஓடி ஒளிக்க முயன்றனர். அவ்வாறு ஓடியவர்களோடு சேர்ந்து தாக்குதலாளிகளும் கரைப்பகுதிகளுக்குள் ஊடுருவியிருக்கலாம் என்ற பீதி எழுந்ததை அடுத்து கரையோரப் பகுதிகளில் கடற்படையினரும், இராணுவத்தினரும் வந்து குவியத் தொடங்கினர்.

கடற்படைத் தளம் மற்றும் துறைமுகப் பகுதியினுள் இடம்பெற்ற மோதல்களில் மீனவர்கள் பலரும் கூட சிக்கி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

**துறைமுகத்துக்கு மேலே கரும் புகை மண்டலம்**

பெரும் வெடி ஓசைகளை அடுத்து துறைமுகப் பகுதிக்கு மேலே இரண்டு இடங்களில் இருந்து கரும் புகை மண்டலம் கிளம்பியது. இதனை வெகு தொலைவில் இருந்தும் காணக்கூடியதாக இருந்தது. வெடி ஓசை மற்றும் கரும் புகை கிளம்புவது கண்டு அதிர்ச்சியடைந்த பல குடும்பங்கள் வீடு வாசல்களை விட்டு வெளியேறி ஓடின. துறைமுகத்தை அண்டிய பகுதிகளில் படையினர் பெரும் எண்ணிக்கையில் வந்து குவிந்து நிலையெடுக்கத் தொடங்கினர்.

**உயிரிழப்புகள்**

சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இந்த திகில் தாக்குதலில் ஏற்பட்ட உயிரிழப்புகள் தொடர்பான தகவல்கள் உடனடியாக ஊர்ஜிதப் படுத்தப்படவில்லை. எனினும், இத் தாக்குதலில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் மற்றொருவர் காணாமற் போனார் என்றும் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்தனர். சுமார் 11 கடற் படைச் சிப்பாய்கள் காயங்களுடன் காலி - கராப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் சிவிலியன்களில் 15 பேரும் காயடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடத்த வந்த அணியில் இடம்பெற்றிருந்த 15 பேரும் கூட இந்தச் சம்பவத்தில் உயிரிழந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

துறைமுகப் பகுதியினுள் தரித்து நின்ற கடற்படைக் கலங்கள் ஐந்து முற்றாகச் சேதமடைந்தன என்றும், எரிவாயு ஏற்றப்பட்ட கப்பல் ஒன்றும் தாக்குதலுக்கு இலக்கானது என்றும் 'இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. எனினும், இதனை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

காலித் துறைமுகம், இலங்கையின் இரண்டாவது பெரிய துறைமுகம் ஆகும். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த 'தக்ஷின' கடற்படைத் தளம், தென் பிராந்தியக் கடற்படையின் தலைமைக் கட்டளையகமாகவும் செயற்பட்டு வந்தது.

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாகப் பலத்த சேதமடைந்த காலி துறைமுகப் பகுதியில் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

பலத்த பாதுகாப்புக் கண்காணிப்பு மிகுந்த கடற்பகுதிக்குள் தாக்குதலாளிகள் மிகவும் துணிகரமாக ஊடுருவித் தாக்குதல் நடத்தி இருப்பது பாதுகாப்பு வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.(ஐ)

## சூட்டுக்காயத்துடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துக்குச் சென்ற யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா விசாரணை நடத்தியதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்காகவும் அடையாளம் காண்பதற்காகவும் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

இதற்கிடையில் - சுமார் 28முதல் 30 வயது வரை மதிக்கத்தக்க இந்தச் சடலத்தில் கறுப்பு, வெள்ளைசதுரங்கள் கொண்ட நீலநிறசாறம் காணப்பட்டது என்றும் - தலைமயிர் குட்டையாக வெட்டப்பட்டிருந்தது என்றும் - தெரிவித்துள்ள கோப்பாய் பொலீஸார், சடலத்தை அடையாளம் காண உதவுமாறும் கோரியுள்ளனர். (78-15-203)

## எத்தனை தடைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இணைத் தலைமை நாடுகள் ஆதரவளிக்கும்.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் தொடர்பில் வேறுபாடுகள் இருப்பதாக இருதரப்பும் கருதினால் ஒரே மேசையில் உட்கார்ந்து பேசி இணக்கத்துக்கு வரவேண்டும்.

தற்போதைய நிலையை யாரும் ஒப்புக்கொள்ளவில்லை. தமது தலைமைப்பீடம் சார்பாக என்னிடம் பேசிய சு.ப.தமிழ்ச்செல்வன், அமைதித் தீர்வில் உறுதியாக இருப்பதாகத் தெரிவித்தார். ஜனாதிபதி மஹிந்தவும் இதில் தெளிவாக உள்ளார்.

ஜெனிவாவில் 28ஆம் திகதி பேச்சுகள் நடைபெறும் என்ற முழு அளவிலான நம்பிக்கையில் நான் திரும்பிச் செல்கிறேன். அங்கே நல்லபடியான நிலைமை ஏற்படும் என்று நம்புகிறேன். இணைத் தலைமை நாடுகளாகிய நாங்கள் நெருங்கிச் செயற்பட்டுவருகிறோம்.

வன்செயல்களால் பொதுமக்கள் கொல்லப்படுவது வருத்தத்திற்குரியது. பொது மக்களைப் படுகொலை செய்யும் அனைத்து வன்முறைகளையும் கைவிட வேண்டும் என்றுதான் நாங்கள் மீள மீள வலியுறுத்துகிறோம். இலங்கையில் எந்த வழிமுறையிலும் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதை நாம் ஏற்கமுடியாது - என்றார் அகாஷி. (த)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
(off Stanly Rd.)
0212228250, 0777 222422
அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
Batch I :- 20/10/2006, Batch II:- 21/10/2006
Batch III:-22/10/2006, Batch IV:- 25/10/2006

அகதிகள் மற்றும் மனிதாபிமான விசா
ஆஸ்திரேலியா மற்றும் கனடா அரசினால் மனிதநேய அடிப்படையின் கீழ் வழங்கப்படும் நிரந்தர வதிவிட விசா விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 7835
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
தொ.பே.: 222 7310

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L DAY CLASS
Eco: B. கஜிதரன் (7.30 - 8.30)
Acc: P. பகீரதன் (8.30 - 10.30)
Com: முரளி (10.30 - 12.30)
கிழமை நாள்களில் தினமும் வகுப்புகள் நடைபெறும்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.10.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org